பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 26 (9—7—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆனி 27 (10—7—68) புதன் [இதழ்: 21

## அரசு ஊழியர் வேலை நிறுத்தம்

### அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது

போப்பால், ஜூலை 8—

மத்தியப் பிரதேச மாநில அரசின் 3-வது 4-வது பிரிவு ஊழியர்கள் தொடங்கியுள்ள 'காலவரம்பற்ற' வேலை நிறுத்தத்தைத் தடை செய்து மாநில அரசு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறது.

போப்பாலிலும், பல மாவட்டத் தலைநகரங்களிலும் அரசு அலுவலகங்களில் வேலை நின்றுவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

எல்லா 3-வது, 4-வது பிரிவு ஊழியர்களும், 'இன்றியமையாத் தொழிலைச் சேர்ந்தவர்கள்' என்று, பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் கூறுகிறது.

# நிஜலிங்கப்பாவின் பொறுப்பற்ற பேச்சு

## தி. மு. க. மீது வீண்பழி சுமத்துகிறார்

### பி. சோ. தலைவர் என். ஜி. கோரே கண்டனம்

புனா, ஜூலை 8—

"எதிர்த் தரப்பில் இருக்கின்றன என்ற ஒரே குற்றத்துக்காக, எதிர்க் கட்சிகளை அவமதிக்கும்வகையில் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா குற்றச்சாட்டுகளை சுமத்தக்கூடாது" என்று பி. சோ. தலைவர் என். ஜி. கோரே விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"தமிழ்நாட்டை இந்திய யூனியனிலிருந்து பிரித்துவிட வேண்டும் என்று இரகசிய எண்ணம் கொண்டுள்ள கட்சி தி. மு. க. என்று திரு. நிஜலிங்கப்பா எதைக் கொண்டு சொல்லுகிறார் என்பது விளங்கவில்லை" என்றும் கோரே அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"அண்மையில் ஸ்ரீநகரில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு திரு. நிஜலிங்கப்பா கூறுவது ஆச்சரியத்தையே தருகிறது" என்றும் குறிப்பிட்டுவிட்டு, திரு. கோரே மேலும் கூறியிருப்பதாவது:—

'கடந்த காலத்தில் தி.மு. க.-வுக்கு இத்தகையஎண்ணம் இருந்திருந்தபோதிலும், இப்போது அதை அடியோடு கைவிட்டுவிட்டது என்றும், அந்தமாதிரி எண்ணம் தி. மு. க.-வினருக்கு இருப்பதாக யாராவது குற்றம் சாட்டினால் அது உருட்டல் மிரட்டல்தான் என்றும் தி. மு. க. அமைச்சர் திரு. மாதவன் திட்டவட்டமாக, நிஜலிங்கப்பாவின் எதிரிலேயே கூறியிருக்கிறார்!

திரு. நிஜலிங்கப்பா, திரு. மாதவன் கூறியதை மறுக்கவில்லை; எனவே, கடந்த இரண்டு வார காலத்தில் தி. மு. க.-வுக்கு எதிராக அவர் போதிய சாட்சியங்களைத் திரட்டியிருப்பதாக யூகிக்கலாமா? அப்படியானால் பொதுமக்களுக்கு அதை எடுத்துரைக்க வேண்டும்; இல்லையேல், இம்மாதிரியான குற்றச்சாட்டுகள் கூறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்."

### அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

"அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஜூலை 11-ஆம் நாளுக்குப் பதிலாக ஜூலை 22-ஆம் நாள் திறக்கப்படும்"

என, பல்கலைக் கழக ரிஜிஸ்திரார் அறிவித்திருக்கிறார்.

## நிபந்தனையின்றி வேலைக்கு திரும்பாவிடில் ஒழுங்கு நடவடிக்கை

### பயர்மென்களுக்கு இரயில்வே நிர்வாகம் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூலை 9—

"வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பயர்மென்கள், ஜூலை 10-ந் தேதி நள்ளிரவுக்குள் வேலைக்குத் திரும்பிவராவிடில், அவர்கள்மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்"

என்று தென் பகுதி இரயில்வேயும் தென் மத்திய இரயில்வேயும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த இரயில்வேக்களில், 4,500 பயர்மென்கள் பணியாற்றுகின்றனர்.

"நிபந்தனைகள் ஏதுமின்றி வேலை நிறுத்தம் திரும்பப் பெறவேண்டும்; அவர்களுடைய கோரிக்கைகள் பற்றி இரயில்வே போர்டு விவாதித்துவருகிறது" என்று இரயில்வே துணையமைச்சர் கூறியுள்ளார்.

வேலைநிறுத்தத்தினால், பயணிகள் இரயில்கள் பலவும், சரக்குகளை ஏற்றிச்செல்லும் இரயில்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

"வேலைநிறுத்தத்தின் காரணமாக இரயில்வேக்கு நாள்தோறும் ரூ. 25 இலட்சம் நட்டம் ஏற்படுகிறது" என்று தென் மத்திய இரயில்வேயின் ஜெனரல் - மானேஜர் கூறியுள்ளார்.

## உறுதிமொழியை நிறைவேற்றுக!

### க. இராசாராம் வற்புறுத்தல்

மதுரை, ஜூலை 9—

நாடாளுமன்ற மக்களவை தி.மு. கழக உறுப்பினர் க. இராசாராம் அவர்கள், 'பயர்மென்'களின் கோரிக்கைகளை ஏற்குமாறு இரயில்வேத்துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டு அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்; அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"கடந்த ஆண்டில் நாடாளுமன்றத்தில், இரயில்வே அமைச்சர் அளித்த உறுதிமொழியின் மீதுதான், தொழிலாளர்கள் இப்போது தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துகின்றனர்; எனவே அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

"பயர்மென்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் திரும்பப் பெறப்பட வேண்டும்."

## கோட்டைக்குள் குத்துவெட்டு!

### உ. பி. காங்கிரசில் தலைமைக்கு ஆபத்து

#### படை திரட்டுகிறது சாக்சேனா கோஷ்டி

இலட்சுமணபுரி, ஜூலை 8

உ. பி. காங்கிரசுக் கட்சிக்குள்ளேயே, திரு. சிப்பன்லால் சாக்சேனா தலைமையில் உள்ள கோஷ்டியினர், தற்போதைய மாநிலக் காங்கிரசுத் தலைவரை விரட்டிவிட்டு அந்த இடத்துக்கு சக்தியும் சமதர்ம நோக்கும், பாரபட்சமற்ற தன்மையும் படைத்த ஒருவரைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு கட்சித் தொண்டர்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்தக் கோஷ்டியின் கூட்டம் நேற்று கூடியது. திரு. சாக்சேனாவும் மற்றவர்களும், அடுத்த இரண்டு மாத காலத்தில் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து மாவட்ட மட்ட மாநாடுகளையும், வட்டார மாநாடுகளையும் நடத்துவதற்கும், தற்போதைய மாநிலக் காங்கிரசுத் தலைமைக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது.

தங்கள் திட்டத்தின் முதல்படியாக, தங்கள் முதல் மாநாட்டை ஆகஸ்டு 28-ல் கோரக்பூரில் கூட்டுவது என்றும், அடுத்து ஆகஸ்டு 1-ல் பெஸ்தியிலும், ஆகஸ்டு 4-ல் தியோரியாவிலும், ஆக. 8-ல் அசாம்கரிலும், ஆக. 11-ல் வாரணசியிலும் மாநாடுகளைக் கூட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நாட்டில் சுதந்தரப் போராட்டத்தில் தொடர்புகொண்ட அனைவரையும் சிறப்பு அழைப்பாளர்களாக இந்த மாநாடுகளுக்கு அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

என்று உ. பி மாநில பிரபல காங்கிரசுத் தலைவரும் முன்னாள் காங்கிரசு முதலமைச்சருமான சி. பி. குப்தா மிகக் கடுமையாகக் குற்றஞ்சாட்டினார்.

இங்கு நடைபெற்ற உ. பி. மாநிலக் காங்கிரசின் பொதுக் குழுக்கூட்டத்தில் திரு. குப்தா பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 3 சதவீதமே உத்தரப் பிரதேசத்துக்கு அளிக்கப்படுகிறது. உத்தரப் பிரதேசம் இந்தக் கதிக்கு உள்ளாகி இருப்பதற்கு மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள இம்மாநில அமைச்சர்களே காரணம்!

"உ. பி. மாநிலத்தை வலுவான பொருளாதாரமுள்ள மாநிலமாக உருவாக்காததை முன்னாள் காங்கிரசு மத்திய அமைச்சர் கே. டி. மாளவியா இடித்துரைத்திருக்கிறார்; இதற்கு மாளவியாவுக்குப் பொறுப்பில்லையா?"

## பொருளாதார வளர்ச்சியில் உ. பி. புறக்கணிக்கப்பட்டுவிட்டதாம்

### மத்திய அரசுமீது முன்னாள் முதலமைச்சர் குற்றச்சாட்டு

லக்னோ ஜூலை 8—

"உத்தரப் பிரதேசத்தில் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் கடந்த 20 ஆண்டுகளாக மேற்கொள்ளாமல் மத்திய அரசு புறக்கணித்து வருகிறது"

## காங்கிரசுக்கு எதிராக மூன்று கட்சிகள்

### உ. பி.-யில் தேர்தல் உடன்பாடு

லக்னோ, ஜூலை 9—

உத்தரப் பிரதேசத்தின் மூன்று அரசியல் கட்சிகளின் தலைவர்கள் (சமயுக்த சோஷலிஸ்டு—பிரஜா சோஷலிஸ்டு—வலது கம்யூனிஸ்டு) கூடி, வருகிற இடைக் காலத் தேர்தலில் பொதுவான குறைந்தபட்சத் திட்டத்தின் அடிப்படையில் மூன்று கட்சியினரும் இணைந்து போட்டியிடுவதற்கான வழிவகைகள் குறித்துப் பேசினர்.

கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரசல்லாத சட்டமன்ற உறுப்பினர் அனைவருக்கும் ஆதரவளிப்பதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

"மக்களுக்குக் கூடிய விரைவில் சனநாயக ஆட்சியை வழங்கும் வகையில் அடுத்த பிப்ரவரிக்கு முன்னதாகவே இடைக்காலத் தேர்தலை நடத்தவேண்டும்" என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

# கையாலாகாத்தனத்துக்கு காங்கிரசுத் தலைவர் கூறும் சமாதானம்

## 'குசேலோபாக்கியான'த்தைச் சான்றுக்கு இழுக்கிறார்!

### கிருஷ்ணபரமாத்மாவையும் மிஞ்சிவிட்டதாக இளங்காங்கிரசுக்காரர் சூடு

லக்னோ, ஜூலை 9—

"கிருஷ்ண பகவானாலுங்கூட தமது குடிமக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வை அகற்ற முடியவில்லை. உதாரணமாக, அவரால் தமது இளமைக்கால நண்பரான குசேலருக்கு உதவி புரிய முடியவில்லை; பொருளாதார ஏற்றத்தாழ்வை அவரால் அகற்ற முடியவில்லை என்பதற்கு இதைவிட வேறு சிறந்த எடுத்துக்காட்டு வேண்டுமா?"

என்று உத்தரப் பிரதேச காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில், முக்கிய காங்கிரசுத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திரு. எச். என். பகுகுணா கூறினார்.

திரு. சந்திரசேகர் தலைமையில் இள காங்கிரசுக்காரர்கள் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கே அவர் இவ்வாறு பதில் கூறினார்.

"ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் காங்கிரசுக்காரர்கள் தவறிவிட்டனர்; சோஷலிசம் பற்றிக் கட்சி நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் செயல்படுத்தப்படவில்லை"

என்றும் இளம் காங்கிரசுக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

திரு. கிருஷ்ண பகவானையும் அவருடைய இளமைக்கால நண்பரான குசேலரையும் திரு. பகுகுணா சர்ச்சையில் இழுத்ததும், திரு. சந்திரசேகர் 'சூடாக' பின்வருமாறு பதில் கூறினார்:—

"குசேலர் உதவி கேட்பதற்கு முன்பே கிருஷ்ண பகவான் அவருக்கு சொத்துக்களை அள்ளிக் கொடுத்தார். ஆனால் இப்போதுள்ள காங்கிரசுத் தலைவர்களோ, ஏழை, எளியவர்கள் தம்மை அணுகியபோது கூடச் செயல்பட்டதில்லை."

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் மாஸ்கோ போய்ச் சேர்ந்தபோது பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

# கூட்டுறவு இயக்கம் வெற்றிபெற முதலமைச்சர் அண்ணா யோசனை

## 'இளைஞர்கட்கு இடமளித்து முதல்வர்கள் ஒதுங்கிக்கொள்ள வேண்டும்'

### கடலூர் பேரங்காடித் திறப்பு விழாவில் உரை

கடலூர், ஜூலை 8—

"கூட்டுறவு இயககத்தில் ஈடுபட்ட முதியவர்கள் தாங்கள் மேலும் தொடர்ந்து அவ்வியக்கத்தில் ஈடுபடுவதைவிட பயிற்சி பெற்ற இளைஞர்களை அவ்வியக்கத்தில் ஈடுபடுத்தித் தாங்கள் அவர்களுக்கு ஆலோசகர்களாக இருக்கவேண்டும். இவ்வாறு செய்தால் கூட்டுறவு இயக்கம் மேன்மேலும் உயர்ந்து பொதுமக்களுக்கு மேலான முறையில் பணிசெய்ய முடியும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், கடலூரில் 'சரவணபவ' கூட்டுறவு பேரங்காடியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"இந்தப் பேரங்காடியைத் திறப்பதன்மூலம் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு மேலும் அதிகரிக்கும்.

"கூட்டுறவு இயக்கம் ஆரம்பத்தில் மக்களுக்குக் கடன் வசதி அளிப்பதே தனது கடமையாகத் துவக்கப்பட்டுத் தற்போது பண்டங்களை விநியோகம் செய்யும் அளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கிறது. மேலும் அது விருத்தியடைந்து பண்டங்களை உற்பத்தி செய்யும் நிலைக்கு உயரும் என நம்புகிறேன்.

"கூட்டுறவு இயக்கம் கட்சிக்கு அப்பாற்பட்டது. நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டோர் அக்கட்சியைச் சார்ந்தவராகவும், காங்கிரசு ஆட்சிக் காலத்தில் அவ்வியக்கத்தில் அக்கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்களென்றால் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்தவர்கள் அரசாங்கத்துடன் ஒன்றித்து இருந்தால்தான் இவ்வியக்கம் மக்களுக்குச் சீரிய முறையில் பணிசெய்ய முடியும் என்று கருதப்பட்டது.

"சுமார் 40 ஆண்டுகளுக்குமுன் பொதுமக்கள் ஒருவரிடமே முழு நம்பிக்கை வைத்திருந்ததால, அவர் சொல்லுக்கு எதிர்ச்சொல் இல்லாதிருந்தது. ஆனால் தற்காலத்தில், 'தனக்கும், எக்காரியத்திலும் பங்கு வேண்டும்' என்ற மனப்பான்மை வளர்ந்து வருகிறது.

"ஆகையால், எக்காரியத்தையும் கலந்து செய்யவேண்டிய பொறுப்பும் அவர்களை அரசாங்கத்தை அமைக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

"ஆகவே கூட்டுறவு அமைக்க ஒரு சிலருக்குத்தான் உரிமை என்பது சரியல்ல சந்தானம் அறிக்கைப்படி திருத்தங்கள் செய்தால், கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் விரிவடையும்."

#### 'முத்துக்குமரகம்' திறப்பு

முதலமைச்சர் அண்ணா அவர்கள், தென்னுற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்க வெள்ளி விழா புதிய கட்டிடமான தற்போதைய சங்கத் தலைவர் பெயரால் உள்ள 'முத்துக்குமரகம்' கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில், தமிழகத்தில் இது ஏழாவது பேரங்காடி திறக்கப்படுவதாயும், கூட்டுறவு இயக்கத்தின் மூலம் தற்போது விவசாயிகளுக்குக் கடன் வழங்க ரூ. 12 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாயும், இம்மாவட்டத்தில் விவசாய உற்பத்தி தீவிரத் திட்டம் ஒன்று தயாரித்து அதன் மூலம் கிணறு பாசன வசதி அதிகரிக்கவும், டிராக்டர் பரவலாக வழங்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மாநில கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் வி. கே. நடராசன் வெள்ளி விழா மலரை வெளியிட்டார்.

சங்கத் தலைவர் டி. டி. முத்துக்குமாரசாமி, முதலமைச்சர் முதலியவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

(3-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் அழவில்லை--

## மகிழ்ச்சியால் சிரித்தனர்!

"இராமாயணக் கதை பற்றித் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அடியெடுத்துக் கொடுக்க -- அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா அதனை முடித்திருககிறார்! 'இருவருக்குமே இராமாயணம் சரிவரத் தெரியவில்லை' என்பதைத் தங்கள் பேச்சின் மூலம் தெரியப்படுத்தி விட்டனர்!

"'இராமனை அயோத்தி மக்கள் 14 ஆண்டுகள் வனவாசத்திற்கு அனுப்பினார்கள்; அதுபோல் காங்கிரசு வனவாசம் போயிருக்கிறது' என்று அவர்கள் கூறியுள்ளனர்!

"இராமனை அயோத்தி மக்கள் காட்டுக்கு அனுப்பவில்லை! ஆனால் காங்கிரசை வனவாசத்துக்கு அனுப்பியது மக்கள்!

"இராமன் காட்டுக்குச் சென்றபோது, 'பூவும் அழுத–புல் அழுத–ஆவும் அழுத–அதனின் கன்றும் அழுத–கிள்ளை அழுத–கிளர்மாடத்துள்ளுறையும் புள்ளும் அழுத–பூசை அழுத...' என்று உயிரினங்கள் எல்லாம் அழுததாகக் கம்பர் கூறுகிறார்!

"ஆனால் காங்கிரசு போகும்போது யார் அழுதார்கள்? மக்கள் அழவில்லை — மகிழ்ச்சியால் சிரித்தார்கள்; 'தொலைந்தது பீடை; விட்டது சனி; அப்பாடா - தொல்லை இனி இல்லை; அரிசிக்கு கியூவும் இனி இல்லை' என்று அல்லவா மக்கள் மகிழ்ந்தார்கள்!

"காட்டுக்கு வனவாசம் போன அந்த இராமனை, 'அரசாள வருக' என்று பரதன் அழைத்தபோதும், 'வரமாட்டேன் - 14 ஆண்டுகள்வரை' என்று அல்லவா அவன் கூறினான்!

"ஆனால் வனவாசம் முடியாமலேயே வந்துவந்து கதவைத் தட்டுகிறார்களே காங்கிரசார்! தேன் சென்னையில் தட்டினர்! சங்ககிரியில் தட்டினர்! தென்காசியிலும் தட்டினர்! இவர்களையா இராமனுடன் ஒப்பிடுவது?"

**--அமைச்சர் மு. கருணாநிதி**

(சைதைக் கூட்டத்தில்)

# கழக ஆட்சியின் சாதனை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டபின், கடந்த 15 மாத காலத்தில் தமிழக அரசு புரிந்துள்ள சாதனைகளின் பட்டியல்கள், 'நம் நாடு' இதழில் தொடர்ந்து வெளியிடப்பட்டுவருகின்றன. சட்டம், கூட்டுறவு, தொழிலாளர் நலன், மருத்துவம்—சுகாதாரம் ஆகிய துறைகள் தொடர்பான பட்டியல்கள் இங்கு தரப்பட்டுள்ளன :—

## தொழிலாளர் நலன்

1. தமிழக அரசுப் போக்குவரத்து ஊழியர்களின் கோரிக்கைகளை, கடந்த ஆண்டில் ரூ. 37 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது
2. காங்கிரசு ஆட்சியில் — 1964-ல், அரசுப் போக்குவரத்துத் துறையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 11 பேருக்கு, 1967-ல் கழக ஆட்சியில் மீண்டும் வேலை கொடுக்கப்பட்டது.
3. தமிழக மின் கழக ஊழியர்களுக்குச் சாதகமான தீர்ப்பை எதிர்த்துக் காங்கிரசாட்சி 'ரிட்' மனு கொடுத்திருந்தது; அண்ணா ஆட்சியில் அம்மனு திரும்பப் பெறப்பட்டது.
4. சலவைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்த கடனைத் திரும்பப்பெற காங்கிரசு ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. கழக ஆட்சியில் கடனை மீட்கும் ஆணை விலக்கப்பட்டது. கொடுத்த கடன் மானியமாகக் கருதப்பட்டது.
5. கோவையில் மூடப்பட்ட ஆலைகளின் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 40 வீதம் கொடுக்கப்பட்டது.
6. தொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கடந்த காலம் போலல்லாமல், அரசு தலையிட்டு முத்தரப்பு மாநாடு நடத்திப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துவருகிறது.
7. தூத்துக்குடிப் பகுதியில் சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு சங்குக்கு 13 காசு உயர்வு அளிக்கப்பட்டது.
8. காங்கிரசு ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட காளீசுவரா ஆலை, அரசின் முயற்சியால் திறக்கப்படுகிறது. இதனால் சுமார் 2,000 தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.
9. தமிழக மின் கழகத்தில் பணியாற்றும் கடைநிலைத் தொழிலாளர்களுக்குச் சீருடை வழங்கப்படுகிறது.
10. சென்னையிலுள்ள அரசு அச்சகத்தில் தற்காலிகமாகப் பணியாற்றுவோர் தொடர்ந்து 5 ஆண்டுகள் வேலை செய்தால், அவர்களை நிரந்தரமாக்க விதி இருந்தது. இக்கால வரம்பு 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்தவர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்பட்டனர்.
11. அரசு அச்சகங்களிலிருந்து நீக்கப்பட்ட தற்காலிகத் தொழிலாளர்களுக்கு, வேலைவாய்ப்பு ஏற்படும் நேரத்தில் முதலிடம் தந்து வேலை தருகிறார்கள்.
12. ஓய்வு பெற்ற முன்னாள் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பில் முதலிடம் தருகிறார்கள்.
13. நீண்ட காலமாகத் தரப்படாமல் இருந்த 'குடும்ப ஓய்வு நல நிதி, அச்சக ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.
14. காங்கிரசு ஆட்சியில் வெளியூர்களில் உள்ள வட்டார அச்சகங்களில் பணியாற்றிய சென்னை நகரத் தொழிலாளர்கள் மீண்டும் சென்னைக்கே மாற்றப்பட்டார்கள்.
15. அச்சகத் தொழிலாளர்களின் உடல் நிலையைப் பரிசோதித்து நல்ல மருந்துவகைகள் தரப்படுகின்றன; வைட்டமின் மாத்திரைகளும், பாலும் தரப்படுகின்றன.
16. வேளாண்மைத் துறையில் டிராக்டர் ஓட்டும் டிரைவர்களுக்கு, பொதுப்பணித் துறையில் உள்ள டிரைவர்களுக்கு வழங்கப்படும் சம்பள அளவுக்குத் தற்பொழுது வழங்கப்படுகிறது; இதனால் ஒவ்வொரு டிரைவரும் மாதம் ரூ. 50 அதிக ஊதியம் பெறுவர்.
17. தமிழக மின் கழக ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாகத் தற்பொழுது ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.
18. கோவையில் மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டது; ஆலைகளைத் திறப்பதற்கான வழிவகைகள் காண்பதற்குப் பல குழுக்கள் அமைக்கப்பட்டன. இதனால் ஆலைகள் திறக்கப்பட்டுத் தொழிலாளர்கள் பயனடைவர்.
19. அச்சகத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் ஆராயப்படுகின்றன; ஆய்ந்து முடிந்ததும் உடனடியாக நிவாரணம் அளிக்கப்படவிருக்கிறது.
20. குன்னூரில் துப்பாக்கிச் சூட்டில் இறந்த தொழிலாளர் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது
21. தொழிலாளருக்கு இலவச வழக்கறிஞர் உதவி கொடுப்பதற்கான திட்டம் வரவிருக்கிறது.
22. தொழிற்சாலைகளில் சமூக நல அதிகாரிகளை அரசே நியமிக்க ஆலோசித்து வருகிறது.

## மருத்துவம்-- சுகாதாரம்

1. ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ நிலையத்திலும், 'சித்த மருத்துவப் பிரிவு' ஆரம்பிக்கப்படுகிறது.
2. தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் சித்த மருத்துவ மருந்தகம் திறக்கப்பட்டிருககிறது.
3. கால்நடை மருத்துவர்களையும் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக உயர்த்த அண்ணா அரசு ஆணை பிறப்பித்தது.
4. தலையில் ஏற்படும் காயங்களை நவீன முறையில் குணப்படுத்த சென்னை மருத்துவமனையில் புதிய பகுதி ஒன்று திறக்கப்பட்டது; இது கிழக்காசியாவிலேயே முதலாவதாகத் துவக்கப்பட்ட மருத்துவமனை ஆகும்.
5. சென்னைக் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் நீரிழிவு நோய்க்குத் தனிப் பிரிவுத் துவக்கப்பட்டுள்ளது.
6. மருத்துவத் துறைக்கு ஆய்வுக்கூட வசதி மிகத் தேவை. ஆய்வுக்கூடம் காலை 10-மணி முதல் மாலை 5-மணிவரை இயங்கிவந்தது. கழக ஆட்சியில் மாற்று ஊழியர்கள் நியமிக்கப்பட்டு 24-மணி நேரமும் இயங்கும் வசதி 5—5—67-முதல் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் துவக்கப்பட்டது
7. கிராமங்களில் மருத்துவ வசதியை அதிகரிக்க அரசினர் உதவிபெற்றுப் பயிலும் மாணவர்கள் மூன்றுண்டுகள் கட்டாயமாக அரசு மருத்துவமனைகளில் பணியாற்றவேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
8. குடும்பக் கட்டுப்பாட்டிற்குப் பெரிதும் உதவும் 'லூப'களை இலவசமாக வழங்குவதற்குக் கழக அரசு வழிசெயதது.
9. சுகாதாரத் துறை அமைச்சர், மருத்துவமனைகளுக்கு அடிக்கடி சென்று வருவதால், மருத்துவமனைகளில் பணி செவ்வனே நடைபெறுகிறது.
10. நெடுங்காலமாக அனுமதிக்கப்படாமல் இருந்த ஆம்பூர், திருப்பத்தூர் குடிநீர் வழங்கு திட்டங்கள் கழக ஆட்சியில் அனுமதிக்கப்பட்டன.
11. ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்களில் செல்வோருக்கு விபத்து ஏற்படும்போது தலையே அதிகம் பாதிக்கப்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு, கட்டாயமாகக் 'காப்புத் தொப்பி' அணியச் செய்யும் திட்டம் ஆராயப்பட்டுவருகிறது.
12. 50 கால்நடை மருந்தகங்கள் இந்த ஆண்டு திறக்கப்படுகின்றன.
13. சென்னைக்கு அருகில் அரும்பாக்கத்தில் 100 படுக்கைகள் கொண்ட நாட்டு மருத்துவமனை திறக்கப்படுகிறது.
14. கோவை, பாளையங்கோட்டை, செங்கற்பட்டு முதலிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள் கட்ட -- கருவிகள் வாங்க இந்த ஆண்டில் ரூ 70-இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சட்டம்

1. கோயில்களில் நடைபெறும் திருமணங்களுக்குக் கோயில்களின் நிர்வாக அதிகாரிகள், பதிவாளர்களாக நியமிக்கப்பட்டனர். இதனால் கோயில்களில் நடைபெறும் திருமணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதாகும்.
2. மாணவர்களுக்கு வசதியாக, 'அரசிதழ் பதிவு பெற்ற ஊழியர்களும் சான்றிதழை உறுதி செய்யலாம்' எனக் கழக அரசு ஆணை பிறப்பித்தது.
3. காங்கிரசுக்காரர்கள், வாஞ்சிநாத அய்யரின் மனைவிக்கு 'தியாகி மானியம்' கொடுக்கவே இல்லை அண்ணா பொறுப்பேற்றதும், அவருடைய மனைவிக்கு உதவிசெய்ய ஆணை பிறப்பித்தார்.
4. பெரியார் காங்கிரசை ஆதரித்தபோதிலும், காங்கிரசார், 'சுயமரியாதைத் திருமணத்தை'ச் சட்டப்படி செல்லுபடியாகச் சட்டம் இயற்றவில்லை. அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்ததும், 'சுயமரியாதைத் திருமணத்தை'ச் சட்டப்படி செல்லுபடியாக்கும் சட்டத்தை இயற்றினர்.
5. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது சில கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். பலருடைய தண்டனை குறைக்கப்பட்டது. பல கைதிகள் கவிதைப் போட்டியில் பங்கு பெறவும், மாநாட்டிற்குச் சென்று வரவும் அனுமதிக்கப்பட்டனர்.
6. திரைப்பட அரங்குகளுக்குத் தற்பொழுது ஓர் ஆண்டுக்குப் பதில் இரண்டு ஆண்டுகளுக்கு, 'லைசென்சு' வழங்கப்படுகிறது.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

# ஆண்டுதோறும் ரூ. 7-கோடி வெளியேறுகிறது!

## அந்நிய உதவியின் பெயரால் நமது செல்வமே வடிகிறது!

### தடுத்து நிறுத்துவதற்கு வழிவகுக்க யோசனை

### நிர்வாகச் சீர்திருத்தக் குழுத் தலைவர் அனுமந்தையா தகவல்

சென்னை, ஜூலை 5—

"நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை, இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தலைமையமைச்சரிடம் தரப்படும்"

என்று, மேற்படி குழுவின் தலைவர் திரு. அனுமந்தையா தெரிவித்தார்.

தமிழ் வர்த்தக சபையின் ஆண்டு விழாவில் பேசுகையில், அவர் நிர்வாக சம்பந்தமாகக் குழுவின் பரிந்துரைகள் எந்த அடிப்படையில் வகுக்கப்படும் என்பதை விளக்கினர்.

"வெளிநாட்டு ஒத்துழைப்பு என்பதன் பேரால் நாட்டிலிருந்து ஆண்டுதோறும் வெளியேறும் நிதிகளைத் தடுக்கும் வகையில் முக்கியமான பரிந்துரைகள் இருக்கும்" என்றார் அவர்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகள் காரணமாக, ஏற்றுமதி-இறக்குமதிப் பிரச்சினையை மறு ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. இத்தகைய நிலுவை பாக்கி மிகவும் அதிகமாக உள்ளது. ஆகையால், நமது செல்வம் வடிந்துபோவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டும்; இது படிப்படியாகக் குறைவதற்கு வழிவகுக்க வேண்டும்.

"மேற்கத்தி நாடுகளின் தொழில் கூட்டு சுவாரசிகரமாக இருக்கிறது. 1967-ம் ஆண்டு முடிய ஏழாண்டுகளில தனியார் துறையில் வெளிநாட்டு முதலீடுகளில் சுமார் 8 சதவிகிதம் இயந்திரச் சாதனங்களாகவும், தொழில் நுணுக்கம் கற்பிக்கும் உருவத்திலும் வந்துள்ளன. வெளிநாடுகளிலிருந்து ரொக்கமாக வந்த முதலீடு சிறு பகுதியேயாகும்.

"மேற்சொன்ன கால அளவில் ஆண்டுதோறும் ரூ. 46 கோடி வீதம் வெளிநாட்டு நிதிகள் வந்துகொண்டிருந்தன; அதே காலத்தில் ரூ 11.6 கோடி வீதம் நிதி வெளியேறிக்கொண்டிருக்கிறது; அதாவது, நமது செல்வம் ஆண்டொன்றுக்கு சராசரி ரூ. 7 கோடி வீதம் வெளியேறி வந்திருக்கிறது."

## மேட்டூர் தேக்கம் திறக்கப்பட்டது

### தஞ்சை மாவட்டத்திற்குப் பாசனம் துவங்கியது

தஞ்சாவூர், ஜூலை 7—

தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மேட்டூர் நீர்த் தேக்கத்துத் தண்ணீர் நேற்று மாலை திறந்துவிடப்பட்டது.

இதன்மூலம் தஞ்சை மாவட்டத்திலும், சுற்று வட்டாரங்களிலும் உள்ள 12 இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும்.

ஆண்டுதோறும் ஜூன் 10-ந் தேதி வாக்கில் திறந்து விடப்படும் மேட்டூர்த் தேக்கம் சென்ற ஆண்டும், இவ்வாண்டும் பருவ மழை உரிய நேரத்தில் பெய்யாததால், வரத்து நீரின்றி தாமதித்துத் திறக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. சென்ற ஆண்டு ஜூலை 3-ம் நாள் திறக்கப்பட்டது.

'ஏ டி.டி -27' ரக (குறுகிய காலப் பயிர்) சாகுபடியை இவ்வாண்டு மேலும் 9-இலட்சம் ஏக்கருக்கு விரிவுபடுத்த அரசு திட்டமிட்டிருந்தது. மேட்டூர் தேக்கம் திறக்கத் தாமதம் ஏற்பட்டதால், கடந்த இரண்டு வார காலமாக குறுவைச் சாகுபடி பாதிக்கப்பட்டது.

தண்ணீர் வருவதில் தாமதம் ஏற்பட்டதால், அரசின் திட்டப்படி 9-இலட்சம் ஏக்கரில் 'ஏ.டி.டி.-27' சாகுபடி செய்வது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

சென்ற ஆண்டிலும் காலங் கடந்தே தண்ணீர் வந்தும், சாகுபடி தடையின்றி நடந்ததுபோல் இவ்வாண்டும் நடக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

## ஆண்டிப்பட்டி சீரணித் தொண்டர்கள்

### வாய்க்கால் வெட்டும் பணியில் ஈடுபட்டனர்

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய சீரணித் தொண்டர்கள் ஆண்டிப்பட்டி பகுதியிலுள்ள அதிகாரி கண்மாய்க்கு தண்ணீர் வருவதற்கான வாய்க்கால் வெட்டவும், கண்மாயைத் தூர் எடுத்து ஆழப்படுத்தவும், கரையை சீரமைக்கவுமான பணியில் ஈடுபட்டனர்.

கண்மாயிலிருந்து நான்கு மைல் அப்பால் உள்ள மலையடிவாரத்திலிருந்து கால்வாய் வெட்டும் பணியை ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் க. சடையாண்டி தலைமையில்—சட்டமன்ற உறுப்பினர் எஸ். பரமசிவம் துவக்கிவைத்தார்.

கால்வாய் வெட்டும் பணியை சீரணித் தொண்டர்கள் மேற்கொண்டனர். சீரணித் தொண்டர்களுடன் தாமும் ஒருவராக நின்று சட்டமன்ற உறுப்பினர் மண்ணை வெட்டிக் கூடையில் நிரப்பித் தந்தார்; அம்மண்ணை, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் சுமந்து சென்று கரையில் போடுவதுமான பணியில் ஈடுபட்டனர்.

சீரணிப் படைத் தலைவர் எம். எஸ். பால்ராஜ், செயலாளர் பி ஆர். இராமசாமி ஆகியோர் சீரணித் தொண்டர்களை உற்சாகப்படுத்தி பணியை முனைநின்று நடத்திவருகின்றனர்.

கிராமப் பொதுமக்கள் தத்தம் சொந்தக் கருவிகளுடன் வந்து வேலைசெய்து வருகின்றனர்.

கால்வாய் வெட்டப்படும் இடத்திற்காக பட்டாதாரர்கள் தங்களுடைய நிலங்களை மனமுவந்து விட்டுக் கொடுத்தனர்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெ. தேவசகாயம், ஒன்றியக் கல்வி வளர்ச்சி அதிகாரி பெ. நாராயணன் ஆகியோர், சீரணித் தொண்டர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்துவருகின்றனர்.

## நன்றி அறிவிப்பு

தென்காசி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் திரு. கா. மு. கதிரவன் மகத்தான வெற்றிபெற ஒத்துழைத்த தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், இடையறாது பணியாற்றிய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழகத் தோழர்கள், கழக ஆதரவாளர்கள். தோழமைக் கட்சித் தோழர்கள் அனைவருக்கும் தென்காசி வட்ட தி.மு.க. சார்பில் செயலாளர் அ. இராமநாதன் நன்றி தெரிவித்துக்கொள்கிறார்.

## அந்தியூர் ஊராட்சி ஒன்றியம்

### தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க ஏற்பாடு

அந்தியூர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் சாதாரணக் கூட்டம் 28—6—68 அன்று தலைவர் கே. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது. அதுசமயம் மாறுபட்ட பருவநிலை காரணமாக அந்தியூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் குடிதண்ணீர் பஞ்சம் ஏற்பட்டதினால், 118 கிணறுகளை சுமார் ரூ. 1 இலட்சம் செலவில் அடிவெட்டு வெட்ட நிர்வாக அங்கிகாரம் செய்யப்பட்டது.

அந்தியூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், மற்றும் ஒன்றிய அலுவலக ஊழியர்களுக்கும், தமிழக அரசின் ஆணைப்படி, 1—6—68 முதல் ஊதிய உயர்வு கொடுக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்தாணியில் ஆரம்பிக்கவிருக்கும் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு, அத்தாணி திரு. ஆனந்தத்திற்குச் சொந்தமான 2/2 எண்ணுள்ள கட்டிடத்தில் தற்காலிகமாக ஆரம்பிக்க மேற்படி கட்டிடத்திற்கான வாடகையை ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து கொடுக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் மொத்தம் 51 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கூட்டுறவு இயக்கம்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்க இயக்குநர் சி. சே. என் எஸ். நாகராசன், 25 ஆண்டுகளில் சங்க முன்னேற்றம் பற்றி அறிக்கையை வெளியிட்டார்.

முன்னாள் சங்கத் தலைவர்களான கே. சீதாராம ரெட்டியார், ஏ. இலட்சுமிநாராயண ரெட்டியார், முதலமைச்சர் அண்ணா ஆகியோரின் உருவப் படங்களை தென்னாற்காடு கூட்டுறவு மத்திய பாங்கி தலைவர் ஆர். கனகசபை, அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ. ஆகியோர் முறையே திறந்து வைத்துப் பேசினர்.

எம். சண்முகம் எம்.எல்.ஏ. நன்றி கூறினார்.

## பேட்டவாய்த்தலை

### கூட்டுறவுச்சங்கத் தேர்தல்

### கழகத் தோழர்கள் வெற்றி

28—6—68-ல் பேட்டவாய்த்தலை கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற நான்கு இடங்களுக்கான தேர்தலில், போட்டியின்றி இரண்டு கழகத் தோழர்களும், கடும் போட்டிக்கிடையில் இரண்டு கழகத் தோழர்களும் வெற்றிபெற்றனர்.

போட்டியின்றி சி. புதுக்கோட்டை தி. மு. க. செயலாளர் க. ரெங்கையனும், காமாட்சிபாளையம் தி. மு. க பொருளாளர் பெ. முத்துவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடும் போட்டிக்கிடையில் சாவல்காரப்பாளையம் தி. மு. க. செயலாளர் ரெ. நல்லையனும், பேட்டவாய்த்தலை தி. மு. க. செயலாளர் அ. சண்முகமும் வெற்றி பெற்றனர்.

## அந்தியூரில் ஓட்டல் பலகார விலை குறைப்பு

3—7—68 அன்று அந்தியூரிலுள்ள ஓட்டல் உரிமையாளர்களைச் சந்தித்து உணவுப் பொருட்களின் விலைகள் குறைந்துவிட்டபடியால் சாப்பாடு, பலகாரங்களின் விலைகளைக் குறைக்கும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க முன்பு சாப்பாடு 75 காசாக இருந்ததை 65 காசாகவும், பூரி, பரோட்டா 30 காசாக இருந்ததை 25 காசாகவும் மிக்சர், பக்கோடா 15 காசாக இருந்ததை 10 காசாகவும், ஒரு இட்டிலி 10 காசாக இருந்ததை 2 இட்டிலி 15 காசாகவும், வடை, பஜ்ஜி, போண்டா 10 காசாக இருந்ததை 5 காசாகவும் விற்பனை செய்வதற்கு ஒப்புக்கொண்டனர்.

ஓட்டல் உரிமையாளர்களுக்கு தி. மு. க. சார்பில் பாராட்டும், நன்றியும் தெரிவிப்பதாக செயலாளர் அ. வெற்றிவேல் அறிவிக்கிறார்.

தேவகோட்டை
தரங்கம்பாடி
கீரனூர்

ஆகிய ஊர்களிலும் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

## நாகை தி.மா.மு.க.

2—7—68 அன்று நாகை தி. மா. மு. க. அமைப்புக் கூட்டம் தி. மு. க. பணிமனையில் நடைபெற்றது; அதுபோது, கோ. கவியரசன் செயலாளராகவும், மு. ரெங்கராசன் துணைச்செயலாளராகவும், பா. விசயக்குமார் தலைவராகவும், மு. செல்வராசு பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர்கள் கல்யாணசுந்தரம், மா. தருமராசன் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துப் பேசினர்.

## சிவகாசியில் வெற்றி விழா

4—7—68 இரவு 7-மணிக்கு சிவகாசி நகர தி. மு. க. சார்பில் திரு. வே. சருணாகரன் தலைமையில் தென்காசித் தொகுதி வெற்றி விழா ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக அதிர்வேட்டுகள் முழங்கச் சுற்றி வந்தது.

நகரில் பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

ஊர்வலத்தில் அலங்கரிக்கப் வண்டியில் அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படம் அலங்கரித்து எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். ஊர்வலம் நாவலர் மன்றம் சென்று முடிவடைந்தது. நகர தி. மு. க. செயலாளர் துரைக்கண்ணன் நன்றி நவின்றார்.

## வெள்ளித்திருப்பூரில்

### கலை நிகழ்ச்சி

30—6—68 மாலை 7 மணியளவில் வெள்ளித்திருப்பூர் தி மு.க. கிளை சார்பில் தோழர் எம். பி. சீரங்கன் தலைமையில், எம். ஆர். இராமலிங்கம் கொடியேற்றி வைத்தார்; செயலாளர் தி. பு. அப்புசாமி வரவேற்புரையாற்றினார்.

மதுரைகண்ணம்மா—தங்கராசு கலைக் குழுவினர் 'பூத்தது பொற்காலம்' என்னும் புதுமை நிறைந்த கலைநிகழ்ச்சி நடத்தினர். கழகத் தோழர்களும் பொதுமக்களும் ஏராளமாக கலந்துகொண்டனர்.

தோழர் தி. செ. துரைசாமி நன்றி கூறினார்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

7. 1957-ல் முதுகுளத்தூர் கலவர வழக்கில் தண்டிக்கப்படடுச் சிறையில் உள்ளோர் விடுதலை செய்யப்பட்டனர்.
8. அமைச்சர்களுக்கு முன்புபோல் தற்போது அதிகமான போலீசுப் பாதுகாப்பு இல்லை.
9. முன்பு பத்திரங்களைப் பதிவுசெய்யக் காலதாமதம் ஏற்பட்டது; ஏனெனில், அலுவலகத்தில் பத்திரத்திற்குப் 'பிரதி' எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. தற்பொழுது பத்திரத்திற்கு, 'அசல்—நகல்' என இரண்டு பிரதிகளையும் நாமே கொடுத்துவிடுவதால், பதிவு செய்வதில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்படுகிறது; இதனால் இலட்சக்கணக்கான ரூபாய் மிச்சமாகிறது.
10. காங்கிரசாட்சியில் பத்திரங்கள் கிடைக்காமல் மக்கள் இன்னலடைந்தனர். (பத்திரங்கள் மத்திய அரசு அச்சிட்டுத் தருவதாகும்) இதைத் தவிர்க்க நல்ல காகிதங்களிலேயே 'அசல்—நகல்' எனும் இரண்டு பிரதிகளையும் எழுதிப் பத்திரப் பதிவாளர் அலுவலகத்தில் அதற்குரிய பணத்தைக் கட்டிவிட்டால் போதும் என்ற புதிய முறையை கழக ஆட்சியில் காண்கிறோம். இதனால், பத்திரங்கள் எழுதுவதில் காலதாமதமும், அதிக விலை கொடுத்து வாங்கும் தவறான முறையும் நீக்கப்பட்டன.
11. தொழிலாளர்களுக்கு இலவச வழக்கறிஞர் உதவி கிடைப்பதற்கான திட்டம் தீட்டப்படுகிறது.
12. துப்பாக்கிச் சூட்டில் இறந்தவரின் குடும்பத்துக்கு இழப்பீடு தரப்படவிருக்கிறது.
13. சிறைக் கைதிகளைத் திட்ட வேலைப் பகுதிகளுக்கு அனுப்பி, செய்யும் வேலைகளுக்குச் சம்பளம் தரும் திட்டம் கழக ஆட்சியில் பரிசீலனையில் இருக்கிறது.
14. சிறைச்சாலைகளில் கூட்டத்தைக் குறைக்கவும், கைதிகளிடம் உழைப்பைப் பெறவும், அதனால் அவர்களும் பயனடையவும் பெரிய திறந்தவெளிச் சிறைச்சாலைகள் ஏற்படுத்தப்படுகின்றன.
15. கழக ஆட்சி, சிறைக் கைதிகள் குல்லாய் அணியும் வழக்கத்தை நீக்கியுள்ளது.
16. கைதிகள் தங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொள்வதற்குச் சிறையில் கடைகள் திறக்கப்படுகின்றன.
17. கைதிகளைச் சிறையில் அவர்களின் உறவினர்களோ, நண்பர்களோ பார்க்க வரும்போது, அவர்கள் சொந்த உடையில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

## கூட்டுறவு

1. கூட்டுறவு பாங்கிகள், விவசாயிகளுக்கு எளிய முறையில் கடன் கொடுத்து உதவுகின்றன; நெல் கொள்முதலும் செய்கின்றன; இதனால், களத்திலேயே கழக ஆட்சியில் விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது.
2. கூட்டுறவு பாங்கிகள் கடன் கொடுக்கும் உயர்வரம்பை உயர்த்தியுள்ளது. ரூ. 9,000 கடன் வரம்பு ரூ. 15,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
3. ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் கூட்டுறவு அதிகாரிகளின் பதவி உறுதி செய்யப்பட்டதால், அத்துறை ஊழியர்களுக்குப் பதவி உயர்வு கிடைத்தது.
4. கூட்டுறவுத் துறையின் மூலம் நடுத்தர மக்களுக்கும், ஏழைத் தொழிலாளர்களுக்கும் தவணை முறையிலும், குறைந்த வாடகையிலும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.
5. கூட்டுறவுப் பாங்கிகளில் பணம் கையாடல் செய்தவர்கள், தற்பொழுது உடனுக்குடன் தண்டிக்கப்படுகிறார்கள்.
6. இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு துணைப் பதிவாளரும், அவருக்குக் கீழ் அலுவலர்களும் நியமிக்கப்பட்டு விவசாயிகளுக்குக் கூட்டுறவு பாங்கிகள் மூலம் விவசாயக் கடன்கள் விரைவில் கொடுக்கப்படுகின்றன; இதனால் உணவு உற்பத்தி பெருகுகிறது.
7. கூட்டுறவு இயக்கத்தை, 'மக்கள் இயக்க'மாக மாற்றவும், ஒரு சிலரின் ஏகபோக ஆதிக்கத்தைத் தடுக்கவும், கழக ஆட்சி, 'சந்தானம் குழு'வை ஏற்படுத்தியிருக்கிறது.
8. கூட்டுறவுத் துறையைச் செப்பனிட 'தனிப் போலீசுப் படை' ஒன்றும் போடப்படுகிறது.

—தொகுத்தவர்: மு. இளங்கோ

# இருபதாண்டுகளாகக் காங்கிரசார் கையாண்ட தவருன நடைமுறை

## தேர்தல் நேரத்தில் தொகுதிக்குச் செலவிடும் அரசு மானியம்

### நீதிமன்றம் சுட்டிக்காட்டிய பிறகு தேர்தல் குழுவின் விழிப்பு

புதுடில்லி, ஜூலை 8—

**"அமைச்சர்கள் தங்கள் விருப்பப்படி செலவிடுவதற்காக ஒதுக்கப்படும் மானியத் தொகையை, தேர்தல் நெருங்கும் சமயத்தில் செலவிடுவதில் சில நல்ல நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்"**

என மத்திய—மாநில அரசுகளுக்குத் தேர்தல் குழு எழுதியுள்ளது.

**"தேர்தல்கள் நியாய முறையில் நடைபெறவேண்டும் என்பதை மனத்தில் கொண்டு, தேர்தல் நெருங்கும் நேரத்தில் அமைச்சர்களுக்கு எந்த அரசும் மானியத் தொகை ஒதுக்கக்கூடாது"**

எனத் தேர்தல் குழு கேட்டுக் கொண்டிருக்கிறது.

**"பொதுத் தேர்தலோ, இடைத் தேர்தலோ நடக்கவிருக்கும் தேதியைத் தேர்தல் குழு அறிவித்ததும் இவ்வாறு பணம் தருவதை அரசு நிறுத்திவிடவேண்டும்"**

எனத் தேர்தல் குழு யோசனை கூறியுள்ளது.

**"ஒரு குறிப்பிட்ட தொகுதியிலோ அல்லது மாநிலத்திலோ இந்தப் பணத்தை அமைச்சர்கள் செலவிடக் கூடாது ; பரவலாக மாநிலம் முழுவதிலும் செலவிடவேண்டும்"**

என்றும் தேர்தல் குழு கூறியிருக்கிறது.

இது சம்பந்தமாக இந்தியத் தலைமை நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை, தேர்தல் குழு மேற்கோள் காட்டியிருக்கிறது :—

**"மானிய விநியோகம் பொது மக்களின் நன்மைக்காக இருந்தாலும், அது ஊழல் காரியமல்ல ; என்றாலும்கூட, தீய பழக்கமாகும்"**

என்று, தலைமை நீதிமன்றம் கூறியுள்ளது.

**"தீய பழக்கத்துக்கும் - ஊழல் பழக்கத்துக்கும் மயிரிழையில் தான் வித்தியாசம்.**

**"பொதுமக்களுக்கு நன்மை பயக்கச் செய்யும் அதிகாரத்தை தேர்தல் சமயத்தில் பயன்படுத்தலாகாது; அதற்கு முன்னதாகவே பயன்படுத்தப்படவேண்டும் ; ஒரு சிறிய ஆதாரம்கூட இந்தத் தீய பழக்கத்தை ஊழலாக மாற்றிவிடக்கூடும்."**

தலைமை நீதிமன்றத்தின் கருத்துக்களை தேர்தல் குழு முழுமையாக ஒப்புக்கொண்டுள்ளது. தீர்ப்பிலிருந்து மேற்சொன்ன பகுதிகள் அடங்கிய ஒரு நகலை மத்திய—மாநில அரசுகளுக்கும், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி நிர்வாகத்துக்கும் அனுப்பியுள்ளது.

## இளைஞர் காங்கிரசுக் கூட்டத்தில் அடிதடி

லக்னோ, ஜூலை 7—

உத்தரப்பிரதேச இளைஞர் காங்கிரசு ஊழியர்கள் கூட்டத்தில் குழப்பமும் அடிதடியும் ஏற்பட்டன.

குழப்பம் கால்மணி நேரம் நீடித்தது. கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் இந்த நிலைமையைத் தவிர்க்க திடீரென்று கூட்டத்தையே முடித்துவிட்டதாக அறிவித்ததால், அத்துடன் கூட்டம் முடிந்தது.

உத்தரப் பிரதேசக் காங்கிரசுக் கமிட்டியின் இரண்டு நாள் மாநாடு இங்கு நடைபெற்றது. மாநாடு உணவு வேளைக்காகக் கலைந்திருந்த போது, இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

மாநில இளைஞர் காங்கிரசு அமைப்பாளரான இராமு சன்வால் என்பவரால் இடைவேளையில் கூட்டப்பட்ட கூட்டத்தில்தான் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

"தேர்தல் டிக்கெட் கொடுப்பதில் 33 சதவிகித இடங்கள் இளம் காங்கிரசுக்காரர்களுக்கு ஒதுக்க வேண்டும்" என்ற கோரிக்கை பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அனைத்திந்திய இளைஞர் காங்கிரசு முகாமின் பொறுப்பாளரான பிரபாகர் திவிவேதி என்பவரின் பேச்சையடுத்து குழப்பம் மூண்டது.

"காங்கிரசுக் கட்சியின் நலனை முன்னிட்டு, தேவையானால், முதிய காங்கிரசுக்காரர்களை சுடவும் செய்வோம்" என்று அவர் சொன்னார்.

உடன் கூட்டத்திலிருந்து ஒரு சாரார் எதிர்ப்புக்குரல் எழுப்பினர்; அவர் பேசிக்கொண்டிருந்த ஒலி பெருக்கியைப் பற்றிக்கொண்டனர்.

திரு. இராமு சன்வால், மற்றவர்களைக் காட்டிலும் கடுமையாக எதிர்த்தார். இதனையடுத்து ஒருவருக்கொருவர் கடுமையான வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டனர். அடி உதையும் நடைபெற்றன.

சாப்பிட்டு ஓய்வெடுத்துக்கொண்டிருந்த முதிய காங்கிரசுக்காரர்கள், இந்தச் சம்பவம் நடந்தது அறிந்து ஓடிவந்து தடுத்தும் பயனில்லை. 15 நிமிட நேரம் அடிதடியெல்லாம் தாராளமாக நடைபெற்றன!

## தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சேலை -- வேட்டிகள்

### அமைச்சர் சத்தியவாணிமுத்து வழங்கினார்

சென்னை, ஜூலை 9—

சென்னை வியாசர்பாடி பகுதியில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, செஞ்சிலுவைச் சங்கத்தின் சென்னைக் கிளையின் சார்பில் அளிக்கப்பட்ட துணிமணிகளையும், மற்றும் பொருட்களையும் அமைச்சர் சத்தியவாணிமுத்து நேற்று வழங்கினார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் ரூ. 6,000 மதிப்புள்ள வேட்டி -- சேலைகள், அலுமினியத் தட்டுகள் -- டபளர்கள், வைட்டமின் மாத்திரைகள் ஆகியவை அமைச்சரிடம் அளிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவைகளை அமைச்சர் வழங்குகையில், பல தாய்மார்கள் கையில் குழந்தைகளுடன் வந்து தங்கள் குறைகளைக் கூறினர்; அவர்களுக்கு அமைச்சர் ஆறுதல் கூறினார்.

அதன்பின், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 20 வீதம் வழங்கப்பட்டது.

## பள்ளி ஆசிரியர்களும் சீருடை அணியும் திட்டம்

### அமைச்சர் நெடுஞ்செழியன் தரும் தகவல்

விழுப்புரம், ஜூலை 8—

"பள்ளி ஆசிரிய—ஆசிரியைகளும் சீருடை அணியச் செய்யும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

இதுபற்றிக் கல்வி இயக்குநரிடம் கலந்து ஆலோசித்துவருவதாகவும் அமைச்சர் கூறினார்.

விழுப்புரத்தை அடுத்துள்ள எருமணந்தாங்கல் கிராமத்தில் நடைபெற்ற பள்ளிக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு அமைச்சர் பேசுகையிலேயே இத்தகவலை அறிவித்தார்.

## அமைச்சர் மா. முத்துசாமி இரஷ்யா பயணம்

### மாநகராட்சித் தூதுக் குழுவுக்குத் தலைமைவகிக்கிறார்

சென்னை, ஜூலை 9—

இரஷ்யாவில் நகராட்சிகளின் நிர்வாகம் நடைபெறும் முறைகள் பற்றி நேரில் கண்டறிவதற்காக, இரஷ்யாவுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்புமாறு அண்மையில் சென்னைக்கு வருகைதந்த இரஷ்யத் தூதுக் குழுவினர் அழைப்பு விடுத்தனர்.

தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்களிடம், இரஷ்யாவிலுள்ள வால்காகிராடு நகரத் துணை மேயர், இந்த அழைப்பைத் தந்தார்.

தூதுக் குழுவின் அழைப்புக்கிணங்க, அமைச்சர் முத்துசாமி அவர்கள் இரஷ்யாவுக்குச் செல்கிறார்.

சென்னை மாநகராட்சி அனைத்துக் கட்சித் தூதுக் குழுவின் தலைவராக அமைச்சர் முத்துசாமி அவர்கள், இரஷ்யாவில் சுற்றுப்பயணம் செய்வார்.

தூதுக் குழுவில், சென்னை மாநகராட்சி மேயர் டாக்டர் அப்துல்லா பேக், நகராட்சித் தி. மு. க. தலைவர் வி. முனுசாமி, நகராட்சிக் காங்கிரசுக் கட்சித் துணைத்தலைவர் ஜி. உமாபதி, முஸ்லீம் லீக் உறுப்பினர் சிலார் மியான் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தூதுக் குழுவினர், ஜூலை 21-ஆம் நாளன்று சென்னையிலிருந்து விமானம்மூலம் புறப்பட்டு டெல்லிக்குச் செல்வர்; பிறகு அங்கிருந்து மாஸ்கோவுக்குப் பயணமாவர்.

## பசி --- பசி --- பசி...!

### 1975-லும் தணியாதாம்

ஜினிவா, ஜூலை 9—

**"பின்தங்கியுள்ள நாடுகளில் பசியால் வாடும் மக்களின் தொகை, 1975-ல்கூடக் குறையப்போவதில்லை"**

என்று ஐ. நா. குழு ஒன்று கருத்துத் தெரிவித்திருக்கிறது.

**"மற்ற நாடுகளிடமுள்ள உபரிப்பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம்தான் பின்தங்கிய நாடுகளின் தேவைகளைச் சமாளிக்க முடியும் ; ஆனால், அவசர நிலைமைக்கு இதைக்கூட நம்ப முடியாது"**

என்று அக்குழு கருத்துத் தெரிவித்திருக்கிறது.

## திருமண அழைப்பு

அன்பின் மிக்கீர் !

வாழிய நலம். வருகிற 14-7-68 ஞாயிறு அன்று காலை 9-மணியளவில், மதுரை—மணிநகரம் மெயின் ரோடிலுள்ள ஜோதி திருமண மண்டபத்தில்,

மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளர்

**எஸ். முத்து, எம்.எல்.சி.**

அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் எமது திருமண விழாவினுக்குத் தாங்கள் இதனையே அழைப்பாக ஏற்று வருகைதந்து வாழ்த்துமாறு வேண்டுகிறோம்.

அன்பின்,

**தி. சுசீலா,**
மதுரை-1

**மா. பாண்டியன்,**
துணையாசிரியர்,
'முரசொலி', சென்னை - 6

## மாநிலங்களிடை அரிசிப் போக்குவரத்து

### தடை நீக்கப்படமாட்டாது

சென்னை, ஜூலை 9—

"மாநிலம் விட்டு மாநிலங்களுக்கு அரிசி கொண்டு செல்வதற்கு இருந்துவரும் தடை நீடிக்கும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தென் வட்டார வர்த்தகர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு அமைச்சர் பேசுகையில் மேலும் கூறியதாவது :—

"அரிசியைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டை மட்டும் தனி மண்டலமாகப் பிரித்துக் கொடுக்கும்படிக் கேட்டிருக்கிறோம்; கேரளத்துடன் தமிழ் நாட்டை இணைத்தால், இரு மாநிலங்களிலும் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும்."

### எவ்வாறு ஏற்க இயலும் ?

நாடு முழுவதிலும் ஒரே சீரான விற்பனை வரி விதிப்புமுறை இருக்கவேண்டும் என்ற யோசனையை ஏற்பதற்கில்லை; ஒவ்வொரு மாநிலத்தின் பொருளாதார நிலையும் வெவ்வேறாக உள்ளன. ஆந்திரத்தில் அரிசிக்கு விற்பனை வரி உண்டு; தமிழகத்தில் இல்லை அப்படியிருக்க ஒரே மாதிரி விற்பனை முறை இயலாத ஒன்றாகும்.

மாநிலங்களுக்கு இன்றுள்ள குறைந்தபட்ச அதிகாரச் சூழ்நிலையில் விற்பனை வரிக்குப் பதிலாக, 'எக்சைஸ்' வரி விதிப்பு முறையை ஏற்பதும் நல்லதல்ல.

மத்திய அரசில் குவிந்துள்ள வரி விதிப்பு அதிகாரக் குவியலைக் குறைத்து அவைகளை மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். இதற்காக எல்லா மாநிலங்களும் போராட வேண்டும்."

## ஆம்பூர் நகர உட்கிளை தேர்தல்

### 15-7-68-ல் மாவட்டச் செயலாளர் விசாரணை

ஆம்பூர் நகர உட்கிளை சிலவற்றின் தேர்தல் குறித்து எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றி நேரில் விசாரித்து ஆவன செய்வதற்காக வ. ஆ. மாவட்டச் செயலாளர் திரு. இரா. தர்மலிங்கம் அவர்கள் 15—7—68 மாலை 4-மணிக்கு ஆம்பூர் கழகப் பணிமனையில் சம்பந்தப்பட்ட தோழர்களைச் சந்திக்கிறார்.

குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் மாவட்டச் செயலாளர் அவர்களைச் சந்தித்து விவரம் தெரிவிக்குமாறு ஆம்பூர் நகரக் கிளை நிர்வாகிகளும், சம்பந்தப்பட்ட கிளைகளின் தோழர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## கரூர் உட்கிளை தேர்தல்

### தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர்

### க. இராசாராம் எம்.பி.

கரூர் நகரின் உட்கிளை சிலவற்றில் நடைபெற்ற தேர்தல் பற்றி சம்பந்தப்பட்ட தோழர்களால் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் குறித்து நேரில்சென்றும், சம்பந்தப்பட்ட தோழர்களைச் சந்தித்தும் விவரம் அறிந்துத் தலைமைக் கழகம் அடுத்து எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைக்கான விவரம் அறிவிப்பதற்காகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. க. இராசாராம் எம்.பி. அவர்கள் 10—7—68 அன்று காலை 10-மணிக்கு பயணிகள் விடுதியில் கரூர்த் தோழர்களைச் சந்திக்கிறார்.

உட்கிளைத் தேர்தல்கள் குறித்துப் பிரச்சினை எழுப்பியுள்ள தோழர்களும், கரூர் நகரக் கிளை நிர்வாகிகளும் திரு. க. இராசாராம் அவர்களைச் சந்தித்து முழு விவரம் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## நடக்க இருப்பவை

### 10--7--68

**கண்டாச்சிபுரம்**

தி. மு. க. சார்பில் வெற்றி விழாப் பொதுக்கூட்டம்; இரவு 8-மணிக்கு ; தலைவர் : இர. சுப்பிரமணியன் ; பேசுவோர் : க. அன்பழகன் எம்.பி., புலவர் வேங்கைமார்பன், அ. சே. குமாரசாமி பி.எஸ்சி., ஏழுமலை, கு. சுப்பிரமணியம், எஸ். செல்வராஜ்.

## பாகிஸ்தானுக்கு இரஷ்ய ஆயுதம்

### இந்தியாவின் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, ஜூலை 9—

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன், சோவியத் இரஷ்யாவுக்குச் சென்றிருக்கும் இந்த நேரத்தில் 'பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுதங்கள் விற்கக்கூடும்' என்று மாஸ்கோவிலிருந்து வெளியாகியுள்ள செய்தி, இங்கு பெருங்கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இரண்டு நாட்களுக்குமுன் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், இதுபற்றி விவாதிக்கப்பட்டதாகவும், அதுபோது, குடியரசுத் தலைவரின் இரஷ்யப் பயணத்தை ரத்து செய்து, இந்தியாவின் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்று சில அமைச்சர்கள் கூறியதாகவும் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூர்யநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.